முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 632**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

22.06.2021, செவ்வாய்கிழமை

1. ஆறுமுக எந்தன் சக்தியாய் கலியில் வந்த
அரங்கனே ஞானபலம் கொண்ட தேசிகனே
மாறுதலை செய்து மக்களை மீட்பேன் என
மாதவத்தை கருணையாக அருளி உள்ள குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
ஆறுமுகப்பெருமான் யானும் ஞான அறிவுரை ஆசி
வரங்களென பிலவ மிதுனதிங்களில் உரைப்பேன்
வல்லமைபட அரங்கன் உருவாக்கிய தொண்டர்படை
3. தொண்டர்படை தன்னார்வ தொண்டு பெருக்கி
தேசமதை காத்து வழி நடத்தும்
உண்டான இந்த பேரிடர் காலங்களிலும்
உயர்வான தர்மத்தை செய்துகொண்டு உயிர்காத்து
4. உயிர்காத்து இனி உலகில் உயிர்பலி இல்லாத வண்ணம்
உயர்வான சேவை ஆற்றி சிறப்புகொள்ளும் தயவாக எந்தன்சக்தியாக
தர்மமாக தனிகாசலன் என் சர்வசூட்சுமமாக இனிமைபட உலகில் அரங்கன்சக்தி
தொண்டர்கள் வழி இணையில்லா ஆற்றலாக இறங்கி உலகமக்களுக்கு
5. மக்களுக்கு பெரும் பாதுகாப்பு தருவதோடு
மகத்துவம்பட அவர்களையெல்லாம் ஞானவான்களாக்கி
தேக்கமின்றி உண்மை மெய்நெறியாம்
அரங்கன் உயர்வான சன்மார்க்க நெறிவழிவந்து
6. வந்துமே உலகோர் அழியாமை பெறுவதற்கும்
இந்த உலகமே பெருமாற்றம் காண்பதற்கும்
சிந்தைபட அரங்கன் கொள்கை வழிநடத்தும்
சிறப்பான அரங்கன் தர்மம் பாதுகாத்து துணை வரும்
7. வருகவே அரங்கனே கலியின் சிறந்தஞானி
வள்ளலும் வாழுகின்ற மாதவசியும் அரங்கனே
இல்லாமை போக்கி உலகை மீட்கும்
இணையில்லாத எந்தன் அவதாரமும் அரங்கனே
8. அரங்கனை ஏற்று உலகம் வர
அச்சுறுத்தும் அனைத்து துன்பங்களும் அகன்றோடி
வரங்களாக மக்களுக்கு சர்வபலமும் கூடி
வையகம் பாதுகாப்பு மிக்க ஞானபூமியாக மாறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.